### ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை மிக மிக முக்கியம்: மக்கள் பணி, கழகப் பணி, தேர்தல் பணி ஆகிய மூன்றிலும்

# இளைஞர் அணியின் பங்களிப்பு சிறப்பாக இருக்கவேண்டும்!

## கரூரில் நடைபெற்ற இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**கரூர், ஜூலை 11 -**

**கரூர் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 235 புதிய நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**புதிதாக பொறுப்புக்கு வந்துள்ள நிர்வாகிகள் இளைஞர் அணியின் பெருமையைக் காக்கின்ற வகையில், கழகத்திற்கு வலுசேர்த்திடும் விதமாக பணியாற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்கி, வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துள்ள `ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பின் கீழ், அவரவர் பகுதியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் சந்தித்து கழகத்தின் சாதனைகளைக் கொண்டு சேர்த்திட வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சி மிக்க உரையின் விவரம் வருமாறு:

கரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் உங்களை எல்லாம் சந்தித்து, உங்களுடன் அறிமுகமாவதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி.

### குளித்தலை தொகுதிதான்

கரூர் மாவட்டத்தில் புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற 235 பேருக்கும், முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரூருக்கு நிறைய பெருமைகள் இருக்கின்றன. ஆனால், `கரூர்’ என்றுச் சொன்னால் முதலில் ஞாபகம் வருவது கலைஞர்தான். ஏனென்றால், கலைஞர் அவர்களை முதல் முறையாக சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பியது, இந்த கரூர் மாவட்டத்தில் உள்ள குளித்தலை தொகுதிதான். அப்படிப்பட்ட கரூரில் மிகச் சிறப்பான வரவேற்பை அளித்த உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களுக்கு இந்த நேரத்தில் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று மாலை வரும்போதே, வாகனத்தில் ஏறியவுடன் சொன்னார் இளைஞர் அணி மண்டல மாநாடு இளைஞர் அணி நிர்வாகிகளை எல்லாம் வைத்து இந்த கோவை மண்டலத்தில் நடத்தி விடலாம் என்று சொன்னார். தலைவர் முடிவெடுப்பார், நான் தலைவரிடம் கேட்டுச் சொல்கிறேன் என்றுச் சொன்னேன். ஆனால், இன்றைக்கு பிரகாஷ் அவர்கள் முடிவெடுத்துவிட்டார். செந்தில் பாலாஜி அவர்கள் ஒரு கூட்டம் நடத்தினாலே மாநாடு போல நடத்துவார். இங்கு பேசும்போது அவர் சொன்னார்.

### இளைஞர் அணி தம்பிகள்

இளைஞர் அணி தம்பிமார்களை எல்லாம் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தி வருகிறேன் என்று. செந்தில் பாலாஜி மாதிரியே அனைத்து மாவட்டச் செயலாளர்களும் இருந்து விட்டார்கள் என்றால், எந்தப் பிரச்சினையும் இல்லை. தலைவர் அவர்கள், இதை என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும், மீண்டும் அழுத்தம் திருத்தமாக நிரூபித்துக் காட்டி வருகிறார் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள். இந்த நேரத்தில் அவருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பல முறை, பல கூட்டங்களில் சொல்லி இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத் துறை அமைச்சர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர் இவ்வளவு பொறுப்புகள் இருந்தாலும், என் மனதிற்கு மிகவும் நெருக்கமான ஒரு பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்றப் பொறுப்புதான். அந்த உணர்வோடுதான் உங்களை எல்லாம் சந்திக்க வந்து இருக்கிறேன்.

### கழகத்தின் இதயம்

நம் இயக்கத்தில் 25 அணிகள். எத்தனை அணிகள் இருந்தாலும், கழகத்தின் இதயம் என்று அனைவராலும் பாராட்டப்பட்ட அணி என்றால், அது நம் இளைஞர் அணிதான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பலமுறை இயக்கத்தின் முதல் அணி என்று பாராட்டப்பட்ட அணியும் நம் இளைஞர் அணிதான்.

இளைஞர் அணியைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்தியாவில் எத்தனையோ இயக்கங்கள் இருக்கின்றன. அனைத்து இயக்கங்களிலும் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், முதன்முதலில் ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணி என்று உருவாக்கப்பட்டது என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான். அதைத் தொடங்கியவர் இன்றைய முதலமைச்சர், நம் தலைவர் அவர்கள்தான்.

1980ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக இளைஞர் அணியை, இதே ஜூலை மாதத்தில்தான் தொடங்கினார். 45 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய அந்த அணி, இப்போது இயக்கத்தின் முதல் அணியாக இருக்கிறது என்றால், அதற்கு இளைஞர் அணியின் பங்கு பணி தான் காரணம்.

ஒவ்வொரு விஷயத்திலும் களத்தில் இறங்கி வேலை செய்வது, நம் இளைஞர் அணிதான். அப்படிப்பட்ட இளைஞர் அணியின் பொறுப்பில் இருப்பது எல்லாம் ஒரு மிகப்பெரிய பெருமை. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இளைஞர் அணியில், இன்றைக்கு நீங்கள் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களாக பொறுப்புக்கு வந்து இருக்கிறீர்கள்.

### நம்பிக்கை இருக்கிறது

நீங்கள் சாதாரணமாக பொறுப்புக்கு வரவில்லை. நீங்கள் எல்லாம் காலரைத் தூக்கிவிட்டு சொல்லலாம். பரிந்துரையில் வந்துவிட்டீர்கள் என்று உங்களை யாராலும் குறை சொல்ல முடியாது. உங்கள் ஒவ்வொருவரையும் நாங்கள் பார்த்து பார்த்துத் தேர்வு செய்துள்ளோம்.

மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், மாநிலத் துணைச் செயலாளர்கள் உங்களின் மாவட்டத்திற்கு வந்து, உங்களை நேர்காணல் செய்து கொடுத்த பட்டியலின் அடிப்படையிலும், இங்கு ஏற்கனவே இருக்கின்ற நிர்வாகிகள் செய்து இருக்கின்ற பணிகள், அவர்களின் மினிட் புக், அவர்கள் கழகக் குடும்பமா என்று பார்த்து, எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொண்டுதான் இந்தப் பொறுப்புக்குத் தேர்வு செய்துள்ளோம்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 மணி நேரம், 3 மணி நேரம் உட்கார்ந்து நானும், உங்களின் மண்டலப் பொறுப்பாளர் பிரகாஷ் அவர்களும், உங்கள் மாவட்ட அமைப்பாளர் சக்திவேல், செந்தில் பாலாஜியுடன் தொடர்புகொண்டு, அவரின் பரிந்துரையையும் வாங்கி, அன்பகம் செந்தில் அவர்களுடன் இப்படிப் பல நாட்கள் உட்கார்ந்து, பார்த்து பார்த்துத்தான் தேர்வு செய்து இருக்கிறோம். நீங்கள் எல்லாம் சிறப்பாக செயல்பட்டதாலும், இனிமேலும் சிறப்பாகச் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் நீங்கள் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பதவி அல்ல, பொறுப்பு

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது பதவி அல்ல, பொறுப்பு. அதையும் மிகமிக பொறுப்போடு உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இளைஞர் அணி என்பது ஒரு சார்பு அணி. எனவே, நீங்கள் எந்தப் பணிகளை செய்தாலும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவர்களின் ஆலோசனையும், அனுமதியையும் பெற்று செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு நிறைய பணிகளைத் தொடர்ந்து கொடுப்பார். அறிவாலயத்திலிருந்தும், அன்பகத்திலிருந்தும் கொடுக்கப்படுகின்ற பணிகளை ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், அதை நீங்கள் ஒன்றியச் செயலாளரிடம் கலந்து ஆலோசனை செய்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நகர, பேரூர் கழகச் செயலாளர்களிடம் ஆலோசித்துவிட்டு, வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் மிகச் சரியான அடியாக இருக்க வேண்டும். மிக பொறுப்புடன் உணர வேண்டும். எந்தவொரு சின்ன தவறுக்கும் நீங்கள் இடம் கொடுத்துவிடக் கூடாது.

### சிறந்த உதாரணம்

எதிர்க்கட்சிகள் நம் மீது ஏதாவது சிறிய தவறு கண்டுபிடித்து விட முடியாதா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நீங்கள் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். இளைஞர் அணியை பொறுத்தவரைக்கும் களத்தில் நீங்கள் வேலை செய்தால், உங்களுக்கான அங்கீகாரத்தை நிச்சயம் தலைவர் அவர்கள் கொடுப்பார். அதற்கு ஒரு சிறந்த உதாரணம், இங்கு தலைமை உரையாற்றிய பிரகாஷ் அவர்கள். ஈரோடு மாவட்டத்தின் அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியவர்தான் பிரகாஷ் அவர்கள். இன்றைக்கு அவருடைய உழைப்பை பார்த்து, நம் தலைவர் அவர்கள் அவருக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வாய்ப்பைக் கொடுத்தார். இளைஞர் அணியில் களப் பணியாற்றி, மக்கள் பணியாற்றி, இன்று மக்களின் ஆதரவோடு இந்தியாவின் பாராளுமன்றத்திற்கு அவர் சென்று கொண்டிருக்கிறார் என்றால் அதற்கு காரணம் நம் இளைஞர் அணி என்பதை நாம் பெருமையாக சொல்லிக் கொள்ளலாம்.



எனவே, இளைஞர் அணியில் சிறப்பாகச் செயல்பட்ட பல பேர் இன்றைக்கு தலைமைக் கழகத்தில், தாய்கழகத்தில் பொறுப்பில் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வைத்து ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்.

### பதிவு செய்யுங்கள்

உங்களின் ஒவ்வொரு பணியையும் நாங்கள் கவனித்துக்கொண்டேதான் இருப்போம். நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு வேலையையும், ஒவ்வொரு பணியையும், நீங்கள் கலந்துகொள்கின்ற ஒவ்வொரு கூட்டத்தையும் தயவுசெய்து உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற மினிட் புக்கில் பதிவேற்றம் செய்யுங்கள். மினிட் புத்தகங்களைச் சரியாகப் பராமரியுங்கள் என்று அதை இந்த நேரத்தில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணி சார்பாக பல்வேறு பணிகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இல்லந்தோறும் இளைஞர் அணி என்று சொல்லி, இளைஞர் அணிக்கு புதிய உறுப்பினர்களை ஒவ்வொரு வீடாக ஏறி, ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து நம் இளைஞர் அணியின் பணிகள், கழகப் பணிகள், அரசின் சாதனைகளை எல்லாம் சொல்லி உறுப்பினர்களைச் சேர்த்து வருகிறீர்கள். இங்கு வந்திருக்கின்ற புதிய நிர்வாகிகள் அந்தப் பணியைத் தீவிரப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று கழகத்தின் கொள்கை களை, சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்லவேண்டும்.

இந்த கரூர் மாவட்டத்தில் கழக அரசின் திட்டங்கள் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டு இருக்கிறது என்று எடுத்துச் சொல்லுங்கள். உதாரணத்திற்கு, நம் தலைவர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன ஒரு திட்டம். மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில் முதல் முறையாக கையெழுத்து போட்டார்.

### 735 கோடி பயணங்கள்

இந்த விடியல் பயணம் திட்டத்தின் மூலமாக இந்த நான்கு வருடத்தில், மகளிர் தமிழ்நாடு முழுக்க 735 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். 735 கோடி பயணங்களை பேருந்துகளில் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் 11 கோடியே 20 லட்சம் பயணங்களை, மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள் என்றால், அதுதான் அந்த திட்டத்தின் வெற்றி.

கரூர் மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளியில் படித்து உயர் கல்வி படிக்க எந்த கல்லூரியில் சென்று படித்தாலும், பெண்களும், ஆண்களும் உயர் கல்வி படிக்க வேண்டும் என்றுதான் இந்த திட்டத்தை நம் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார். இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும் 15 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறார்கள் நம் தலைவர்கள்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம். அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். அதில் கரூர் மாவட்டத்தில் மட்டும் 31,000 பள்ளிக் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகிறார்கள்.

### அப்பாவிடம் சொல்லுங்கள்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். தமிழ்நாடு முழுக்க 22 மாதங்களாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்து வருகிறார். அதில் இந்த கரூர் மாவட்டத்தில் மட்டும், ஒரு லட்சத்து 70 ஆயிரம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் வாயிலாகப் பயன் பெற்று வருகிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு மகளிர் சுய உதவி குழுச் சகோதரிகளைச் சந்தித்து விட்டு வந்தோம்.

நான் அங்கு உள்ளே செல்வதற்கு முன்பு, நான்கு தாய்மார்கள் வந்தார்கள். அங்கு வந்து என் கையைப் பிடித்துக் கொண்டு, ``ரொம்ப நன்றிப்பா, உங்கள் அப்பாவிடம் நன்றி சொன்னேன் என்று சொல்லுங்கப்பா. முதலமைச்சருக்கு நன்றி சொன்னேன் என்று சொல்லுங்கள்.” ``என்னம்மா வேண்டும்?” என்று கேட்டேன். மாதம் 15ஆம் தேதி ஆகிவிட்டால் சரியாக எனது வங்கிக் கணக்கு ஆயிரம் ரூபாய் வந்து விடுகிறது. நான்கு மகளிர் இருந்தார்கள். நான் கூட பயந்துவிட்டேன் இந்த அம்மா கேட்டது போன்று அந்த அம்மாவும் கேட்கப் போகிறது என்று. `உனக்கும்மா?’ என்று கேட்டேன். ``எங்கள் நான்கு பேருக்கும் சரியாக வந்து விடுகிறது” என்று சொன்னார்கள். ``அந்த ஆயிரம் ரூபாயை வைத்து என்ன செய்கிறீர்கள்” என்று கேட்டேன். ``நாங்கள் அதை சேமிக்கிறோம். மாத்திரை, மருந்து வாங்குவதற்கு அதைப் பயன்படுத்துகிறோம்” என்று சொன்னார்கள். ``உங்கள் அப்பாவிடம் சொல்லுங்கள், இதற்காகவே உங்கள் அப்பாதான் அடுத்த முதலமைச்சராக வரப்போகிறார்” என்று அந்தத் தாய்மார்கள் வாழ்த்தினார்கள்.

இதைத் தவிர, சில பேருக்கு மகளிர் உரிமை தொகை விடுபட்டு போயிருக்கிறது. எங்களுக்கு இன்னும் வரவில்லை என்ற புகார்கள் இருந்தன. அதை சரிசெய்வதற்காக இப்போது மீண்டும் நாம் தலைவர் அவர்கள் அறிவித்து வருகிறார்கள். வருகின்ற 15ஆம் தேதியிலிருந்து அதற்கான முகாம்கள் அமைக்கப் போகிறார்கள். எனவே இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் தொடர்ந்து பேசி ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள்.

### 30 சதவிகிதம் வாக்காளர்கள்

இவை இல்லாமல், `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முக்கியமான முன்னெடுப்பை நம் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த முன்னெடுப்பின் கீழ், கழகத் தோழர்கள் அவரவர் வாக்குசாவடிகளில் இருக்கின்ற ஒவ்வொரு குடும்பத்தையும் நேரில் சென்று சந்தித்து அவர்களை நம் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டும். வாக்குச்சாவடிகளில் இருக்கின்ற வாக்காளர்களில் குறைந்தது 30 சதவிகிதம் பேரை கழகத்தில் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் இலக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணிகளை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் வழிகாட்டுதல்களுடன் நீங்கள் ஈடுபட வேண்டும்.

இந்த நேரத்தில் கரூர் மாவட்டத்திற்கு ஒரு வாழ்த்து சொல்ல வேண்டும். ஏனென்றால், இந்த முன்னெடுப்பை ஆரம்பித்து, ஐந்து நாட்கள் ஆகின்றன. தலைவர் அவர்களுக்கு தினமும் அந்த பட்டியல் சென்றுவிடும். எந்தெந்த மாவட்டம் எவ்வளவு சேர்த்து இருக்கிறார்கள் என்று. அதில் 234 தொகுதிகளில் முதல் தொகுதி திருச்சி, இரண்டாவது தொகுதி இந்த கரூர். எனக்குத் தெரிந்து இன்னும் ஐந்து நாளில் முதலிடத்திற்கு வந்துவிடும்.

### மக்களோடு பழகுங்கள்

தலைவர் அவர்கள் அந்தப் பட்டியலை எனக்குக் காண்பித்தார்கள். அந்தப் பட்டியலில் பார்த்தீர்கள் என்றால், முதல் 10 இடங்களில் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகள் இருக்கின்றன. அதுதான் இந்த கரூர் மாவட்டத்தின் சிறப்பு. அதுதான் செந்தில் பாலாஜி அவர்களின் சிறப்பு. எந்தப் பணியை எடுத்தாலும், அதைச் சரியாக களத்தில் இறங்கிச் செய்து முடிக்கக் கூடியவர். எனவே அப்படிப்பட்ட மாவட்டச் செயலாளர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறார். இளைஞர் அணியை அரவணைத்துச் செல்லக்கூடியவர். மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமாக இந்த கரூர் மாவட்டம் திகழ்கிறது. நீங்கள் அனைவரும் மக்களோடு மக்களாகப் பழக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### வெற்றிக்குப் பாடுபடுங்கள்

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒன்பது மாதங்கள்தான் இருக்கின்றன. இந்த சாதனைகளை எல்லாம் சொல்ல `ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பு ஒரு நல்ல வாய்ப்பு. மக்களை சந்தித்து அவர்களுடன் நெருக்கமாகப் பழகுவதற்கும் நல்ல வாய்ப்பு. உங்கள் கையில், இந்தத் தெருவில் இருக்கின்ற ஐந்து வீடுகள் என் பொறுப்பு. நான் யாரைச் சொல்கிறேனோ அவர்களுக்குதான் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையை 150, 200 பேரின் நம்பிக்கை மட்டும் நீங்கள் பெற்று விட்டீர்களென்றால், உங்களை யாராலும் விட்டுவிட முடியாது. தலைவர் அவர்கள் நிச்சயம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தை சரியான நேரத்தில் கொடுத்து விடுவார். அதற்கு நீங்கள் சரியாக தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சாரத்திற்கு செல்லும்பொழுது, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, பேசும்பொழுது சொல்லுவேன். வேட்பாளர் யாராக இருந்தாலும், வேட்பாளரின் வெற்றி, உதயசூரியனின் வெற்றி, நம் கழகத் தலைவர் அவர்களின் வெற்றிக்கு இளைஞர் அணி தம்பிமார்களின் தேர்தல் பணி மிக மிக முக்கியமானதாக இருக்கும் என்று சொல்வேன். இதை தேர்தல் முடிந்து வெற்றிக்குப் பிறகு நீங்கள் சொல்வீர்கள். அதேபோல் சில மாவட்டச் செயலாளர்கள் சொல்வார்கள். ``அண்ணா இந்த வெற்றிக்கு இளைஞர் அணி தம்பிமார்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள்” என்று சொல்வார்கள். அதில் கரூர் என்றைக்குமே முதலிடத்தில் இருந்திருக்கிறது. எனவே, உங்கள் மீது இருக்கின்ற அந்த நம்பிக்கைதான் காரணம்.

தலைவர் அவர்கள் `குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம்’ என்று சொல்லி இருக்கிறார். அந்த 200 தொகுதிகளில் முதல் நான்கு தொகுதி இந்த கரூர் மாவட்டத்திலிருந்து வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மூன்று நாட்களுக்கு முன்புதான் சொன்னோம். மூன்று நாட்களிலேயே இவ்வளவு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள செந்தில் பாலாஜி அவர்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். வந்திருக்கின்ற இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேரையும் மீண்டும் நான் வணங்கி, உங்களுக்கெல்லாம் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, உங்களின் மக்கள் பணி, கழகப் பணி, தேர்தல் பணி,சிறப்பாக இருக்க வேண்டும். `ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையில் உங்களின் பங்கு மிக மிக முக்கியம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜி, நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத்தின் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரகாஷ், மாநகரச் செயலாளர் கனகராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் மாணிக்கம், இளங்கோ, சிவகாமசுந்தரி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் அன்னியூர் ராஜேந்திரன், மணிராஜ், மனோ ஜான், கரூர் முரளி, விஜயகுமார், மாநகர மேயர் கவிதா கணேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவருமான சக்திவேல், மாநகர அமைப்பாளர் கராத்தே பூபதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் அருண், சி.கே.ராஜா, நந்தினி யுவராஜ், ஆத்தூர் பாபு, கனகராஜ், மாநகர துணை அமைப்பாளர்கள் நித்தியானந்த், சுபாஷ், கார்த்திக், த.சுபாஷ், ராஜாராம்,உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார், அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். ஜி.தண்டபாணி, சா.இராசவன்னியன், பாவாடை கோவிந்தசாமி, வி.கே.வெங்கட்ராமன், ஆர்.எஸ்.எம்.தணிகைச் செல்வன், ஆனந்தி சரவணன், எம்.எஸ்.கணேஷ் குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் பண்ருட்டி நகரத்தில்,ராஜாஜி சாலையில், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செல்வ .துரைராஜ், சகோதரர் செல்வ. சுரேஷ் ஆகியோரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஹோட்டல் நித்திய பவன் உயர்தர சைவ ஏ.சி, உணவகத்தை , பண்ருட்டி நகர மன்றத் தலைவரும் , நகர தி.மு.க. செயலாளருமான க. இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் திறந்து வைத்தார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மண்டல தலைவர் டி. சண்முகம் செயலாளர் வி .வீரப்பன், பண்ருட்டி நகர திமுக பொருளாளர், நகரமன்ற உறுப்பினர், ஆர் .கே. ராமலிங்கம், நகர கழக அவைத் தலைவர் ஆர். ராஜா, மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.